

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சியில வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் ”பேரூராட்சி அளவில் புதிய உழவர் சந்தை அமைத்தல், திட்டத்தின் கீழ் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய உழவர் சந்தையை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி 04.11.2023 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன், இணை இயக்குநர் பெரியசாமி, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) திருமதி. சங்கரலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் பலர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் அறிக்கை!

பெரம்பலூர், நவ. 8 -

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் கழகத்தினர் தீவிரமாக ஈடுபட வேண்டி மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் எதிர்வரும் 01.01.2024ம் தேதியை தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணைப்படி அறிவித்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர்,குன்னம் இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும், 2024ம் ஆண்டு ஜனவரி 01ம் தேதியினை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த சுருக்க பணிகள் 27.10.2023ம் தேதி முதல் 09.12.2023ம் தேதி வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்களை நீக்கம் செய்யவும்,பெயர்களை திருத்தம் செய்யவும் மனு



செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023, சனிக்கிழமை,

05.11.2023, ஞாயிற்றுக் கிழமை,

18.11.2023, சனிக் கிழமை,

19.11.2023, ஞாயிற்றுக் கிழமை ஆகிய நான்கு நாட்கள் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் இருந்தால் தற்போது புதிதாக சேர்ப்பதற்கு படிவம் 6,

ஆதார் எண் சேர்ப்பதற்கு படிவம் 6 பி,

பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம் 7,

எழுத்துப்பிழைகள், முகவரி மாற்றம் செய்வதற்கும், வாக்காளர் அடையாள அட்டை நகல் கேட்க விரும்புவதற்கு படிவம் 8, ஆகியவற்றை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட தேதிகளில் அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் அல்லது வட்டாட்சியர் அலுவலகங்களில் வழங்கலாம்.

இந்த முகாம்களில் பெறப்படும் அனைத்து வகையான படிவங்களும் பரிசீலனை செய்யப்பட்டு 05.01.2024 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01012024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024,ம் ஆண்டு ஜனவரி 01ம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச்செயலாளர்கள்,

அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கிளைக்கழகச்செயலளர்கள், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள்(BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள்(BLC) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த பணிகள் குறித்து கழகநிர்வாகிகள் மாவட்ட கழக அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டுகிறன்.

இவ்வாறு குன்னம் சி. இராஜேந்திரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# விழுப்புரத்தில் நடப்போம் நலம் பெறுவோம் நடைபயிற்சி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் கொடி அசைத்து துவக்கி வைத்தார்!

விழுப்புரம், நவ. 8 -

தமிழகம் முழுவதும் தமிழகஅரசின்சுகாதாரத்துறை மற்றும் நோய் தடுப்பு மருத்துவ துறை சார்பில் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடம்போம். நலம் பெறுவோம் என்ற திட்டத்தினை தமிழகம் முழுவதும் நடை பயிற்சி துவங்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் பழனி தலைமையில் விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் லட்சுமணன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான கொடி அசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து அமைச்சர் செஞ்சிமஸ்தான்,மாவட்ட ஆட்சியர் பழனி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் லட்சுமணன் உள்ளிட்டோர் நடைபயிற்சி மேற்கொண்டனர்.

இதில் சுகாதாரத்துறை அலுவலர்கள், பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் நடைபயிற்சி மேற்கொண்டனர். சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவுக்கு அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் மேற்கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபயிற்சி முடிவடைந்தது. இதில் மருத்துவர்கள் சங்கம் சார்பில் நடைப்பயிற்சியால் ஏற்படும் நன்மை குறித்த துண்டு பிரசுரங்களை மக்களுக்கு வழங்கினர்.

சென்னை கிழக்கு மாவட்டத்தில்

# ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் படிப்பகங்கள் திறப்பு!

## மாவட்ட இளைஞர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, நவ. 8-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் 30.10.2023 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் சென்னை ஓட்டேரி ஸ்டாரன்ஸ் ரோடு ஜி.பி.மினி ஹாலில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

'நீட் விலக்கு நம் இலக்கு' என்பதை வலியுறுத்தி இல்லம் தோறும் சென்று கையெழுத்து பெற இருக்கும் இளைஞர் அணியின் பட்டியல் தொகுதி பகுதி வட்டம் வாரியாக விவரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

இல்லம் தோறும் சென்று இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்ப்பது என்றும் இளைஞர் அணி பயிற்சிபாசறைகூட்டங்கள் வட்டம் தோறும் நடத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் படிப்பகங்கள் திறக்க வேண்டும்.

17.12.2023-ல் சேலத்தில் நடைபெறவிருக்கும் இளைஞர் அணியின் இரண்டாம் மாநில மாநாட்டிற்கு சென்னை கிழக்கு மாவட்டத்திலிருந்து தொகுதி வாரியாக, பகுதி வாரியாக, எத்தனை பேர் கலந்து கொள்வார்கள் என்று படிவத்தில் பூர்த்தி செய்து தர வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆய்த்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி அறிவிப்பின்படி வீரப்பன்சத்திரம் பகுதி செயலாளர் வி.சி.நடராஜன் தலைமையில் சிதம்பரனார் வீதி, ஏ.பி.டி. ரோடு, அதியமான் நகர், நாட்ராயன் கோவில் வீதி, ஜெயகோபால் வீதி, ராமமூர்த்தி நகர் ரேஷன் கடை அருகில், விநாயகர் கோவில் வீதி ஆகிய இடங்களில் கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் வழங்கினார். நிகழ்வில் மாவட்டப் பொருளாளரும், மண்டல குழு தலைவருமான ப.க.பழனிச்சாமி, இரா.சேகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், பெ.சீனிவாசன் மாமன்ற உறுப்பினர்கள் மல்லிகா நடராஜன், சுகந்தி தங்கமணி, புனிதா சக்திவேல், எஸ்.ரவி, சரண்யா சங்கமேஸ்வரன், எஸ்.முருகேசன் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட

“உடன்பிறப்புகளாய் இணைவோம்”என்ற மாபெரும் முன்னெடுப்புடன்

“முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு”

புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்தியவரலாற்றில் ஜனநாயகமுறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநிலஅமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒருஇலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு. கழகம்.

“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டிகாத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒருகோடி உறுப்பினர்கள் சேர்க்க “உடன் பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்டபேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜீன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதியஉறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்.” ஏன கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற ‘தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்’ நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதிமுதல் 2023 ஜீன் 3ஆம் தேதிவரை, “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுமற்றும் கழகபவளவிழா ஆண்டு” உறுப்பினர்களை சேர்த்தல்பணிகளை “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒருகோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்றபடிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 1 முதல் 1000 வரை**எண் கொண்ட இரசீதுகள் வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 நவம்பர் 7ஆம் தேதிமுதல் 10ஆம் தேதிக்குள்**,தலைமைக் கழகத்திற்கு நேரில்வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரிபார்த்து பெற்றுச் செல்லவேண்டுமெனகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெறமுடியாத நிலை ஏற்படு மாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

**புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவாரகாலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பிவைத்திட வேண்டும்.**

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள் தலைமைக் கழக இரசீது எண். 1 முதல் 1000 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மத்திய
9) திருவள்ளூர் மேற்கு
10) காஞ்சிபுரம் வடக்கு
11) காஞ்சிபுரம் தெற்கு
12) வேலூர்
13) திருப்பத்தூர்
14) விழுப்புரம் வடக்கு
15) கள்ளக்குறிச்சி தெற்கு
16) கடலூர் கிழக்கு
17) தஞ்சை மத்திய
18) தஞ்சை தெற்கு
19) புதுக்கோட்டை வடக்கு
20) சேலம் கிழக்கு
21) சேலம் மத்திய
22) நாமக்கல் மேற்கு
23) கோவை வடக்கு
24) கோவை தெற்கு
25) கோவை மாநகர்
26) திருப்பூர் தெற்கு
27) ஈரோடு வடக்கு
28) மதுரை வடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) தென்காசி தெற்கு

**குறிப்பு:** தலைமைக் கழக இரசீது எண்.1000க்கு மேல்உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.